சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 163/2010

பெயர் திரு. கமலக்கண்ணன் நாள்.06.11.2025
த/பெ. போரூரான்

**பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு நிலை விசாரணை**

1) வழக்கு எந்த புல எண்ணிற்கு நடைபெறுகிறது என்று எனக்கு தெரியும். அதன் புல எண்.477 ஆகும். எந்த உட்பிரிவுக்கு வழக்கு நடைபெறுகிறது என்றால் புல எண். 477/3க்கு நடைபெறுகிறது. புல எண். 477/3 என்பது மீண்டும் உட்பிரிவு செய்யப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இவ்வழக்கில் வந்த அழைப்பாணையில் எந்தெந்த உட்பிரிவு எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வழக்கில் 3நபர்கள் வாதிகள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. முதல் வாதி ஏ பட்டியல் சொத்துக்கள் தனக்கு உரிமை என்று வழக்க தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். 2ம் வாதி பி. பட்டியல் சொத்துக்கள் தனக்கு உரிமை என்று வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். அதே போல் 3ம் வாதி சி. பட்டியல் தனக்கு சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். புல எண். 477/3ஏ5 எனக்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரிதான். பி பட்டியலில் கண்ட புல எண். 477/3ஏ2 மற்றும் புல எண். 477/3ஏ4 ஆகியவற்றில் எனக்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சி பட்டியல் சொத்துக்களும் எனக்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2) வழக்குச் சொத்துக்களில் பட்டா என் பெயரில் இல்லை என்றால் சரிதான். பட்டாவிற்கு விண்ணப்பித்துள்ளோம். ஏற்கனவே வாதிகள் மு.வ.151/2007 என்னும் வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வாதிகளுக்கு

ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கும், அதற்கும் சம்மந்தம் இல்லை. அப்பொழுது என் தாயார் உயிருடன் இருந்தார். மு.வ.151/2007 வழக்கில் நான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவ்வழக்கில் உள்ள சகாதேவன் யார் என்றால் அவர் இந்த இடத்தை விலை பேச வந்த நிலத் தரகர் ஆவார். மு.வ.151/2007 வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. என் தாயார் உயிருடன் இருந்ததால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு என் தாயார் உயிருடன் இருந்ததால் எனக்கு அதில் சம்மந்தம் இல்லை என்று கூறி எதிருரை தாக்கல் செய்யவில்லை. என் தாயாருக்கு தான் சொத்து உரிமை என்றும், அப்பொழுது எனக்கு உரிமை இல்லை என்றும் கூறி அவ்வழக்கில் பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3) பி.த.சா.ஆ.1 ஆவணம் தண்ணீர்பட்டு சேதமடைந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு சார் பதிவு நகல் பெற்று தாக்கல் செய்துள்ளேன். பி.த.சா.ஆ.1 ல் கண்ட சொத்திற்கு தெற்கே லோகு ரெட்டியார், வடக்கே லோகு, மேற்கே லோகு மற்றும் கிழக்கே லோகு நிலங்கள் உள்ளன. பி.த.சா.ஆ2ல் தாஸ் நிலத்திற்கு கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.2ல் 35 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதற்கும் வழக்குச் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. பி.த.சா.ஆ.3 புல எண்.477க்கான சொத்தாகும். பி.த.சா.ஆ.3ல் புல எண்.477 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 457 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ( பிரதிவாதியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் சாட்சி நேராக நின்று கொண்டு இருந்தார். அவரை அவரது இருக்கையில் அமரச் சொல்லியும் கேட்காமல் பல முறை குறுக்கு விசாரணைக்கு இடையூறு செய்தவாறு முன்னால் வந்து நின்று கொண்டு சாட்சி கூறிய அனைத்தையும் பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார். சாட்சியிடம் கேட்கப்பட்ட கேள்விக்குண்டான பதில் மட்டும் பதிவு செய்யப்பட்டது.) பி.த.சா.ஆ.5ல் நான்கு புல எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புல எண். 457 என்பது

தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பிழைத்திருத்தல் ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. பி.த.சா.ஆ.4ற்கும், வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வீரம்மாள் என்பவர் எனது தாயார் என்று சொன்னால் சரிதான்.

4) பி.த.சா.ஆ.5ல் உட்பிரிவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் மேல் புறம் 45 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.5ல் பக்கம் 4ல் 41 சென்ட் கீழே பேனாவினால் கோடு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.6 வழக்கிற்கு பின்னிட்டது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.9 வழக்கிற்கு பின்னிட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், வழக்குச் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.8 வாய்தா ரசீதில் கண்டுள்ள பட்டா எண் வழக்குச் சொத்திற்கானது அல்ல என்று சொன்னால் சரிதான். தாஸ்க்கு யார் யார் வாரிசுகள் என்று எனக்கு தெரியாது. கோதண்டராமனின் தகப்பனார் பெயர் தாஸ் வீராசாமி என்று கூறுவார்கள், சரியாகத் தெரியாது. அதனால் அந்த புல எண்களில் அவருக்கு உரிமை உள்ளது என்றால் இருந்திருக்கலாம். அந்த சொத்து கோதண்டராமனுக்கு கிடைத்து, அதனை புவனேஸ்வரிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. புவனேஸ்வரி அந்த சொத்தை வாதிகளுக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

5) வா.த.சா.ஆ.7 பட்டா புவனேஸ்வரி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6 ஜெயஸ்ரீ பெயரில் உள்ளது என்றால் அவர்கள் மாற்றிக் கொண்டார்கள். வாதிகள் தான் வழக்கச் சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் பட்டா என் பெயரில் மாறவில்லை என்பதால் அவர்கள் செலுத்தி வருகிறார்கள். வா.த.சா.ஆ.13 அடங்கலில் வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று உள்ளது என்றால் எங்கள் சொத்தை நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். நாங்கள் அனுபவம்

செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக எதிர்க்கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வீணாக தொந்தரவு செய்தேன் என்றாலும், ரூ.1,00,000/— நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை — இல்லை.